# புத்தெழில்


திங்கள் வெளியீடு



★ சித்திரை 1989 ★



எமது
இதயங்கனிந்த
புத்தாண்டு
வாழ்த்துக்கள்





ஆங்கில மருந்து வகைகள்
தமிழ் மருந்து வகைகள்
எண்ணெ வகைகள்
மருந்துச் சரக்குகள்
குழந்தைகளின் பால்மா
ஓடிக்கொலோன்
பவுடர் வகைகளும்
எவர்சில்வர் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
அழகுசாதனப் பொருட்கள்

அனைத்தையும் நியாயமான விலைக்குப் பெற
நாடுங்கள்!

பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

# சாந்தி பார்மஸி

பஸ் நிலையம்
அச்சுவேலி

எம்மிடம் பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
பல வர்ண வாழ்த்துமடல்களும்
தினசரி பத்திரிகைகள் பெறவும்

அத்துடன்

★ பாட்டா பாதணிகள்
★ பிளாஸ்ரிக் பொருட்கள்
★ எவர்சில்வர் பாத்திரங்கள்
★ லாஸ்ரிக் நூல் வகைகள்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஸ்தாபனம்

# விநாயகர் ஸ்ரோர்ஸ்

புத்தூர்



# புராணங்கள்

உண்மையின் பேர் தெய்வம் என்போம் - அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்;
உண்மைகள் வேதங்கள் என்போம் - பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்.

கடலினைத் தாவும் குரங்கும் - வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்,
வடமலை தாழ்ந்ததனாலே - தெற்கில்
வந்து சமன் செய்யும் குட்டை முனியும்.

நதியினுள்ளே முழுகிப் போய் - அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுறவே மணம் செய்த - திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம்.

ஒன்று மற்றொன்றைப் பழிக்கும் - ஒன்றில்
உண்மையென்றோதி மற்றொன்று பொய்யென்னும்
நன்று புராணங்கள் செய்தார் - அதில்
நல்ல கவிதை பல பல தந்தார்.

கவிதை மிக நல்ல தேனும் - அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்
புவிதனில் வாழ்நெறி காட்டி - நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்

பாரதியார்

# தங்கைக்கு ஓர் மடல்

## அன்புத் தங்கை மணிமேகலைக்கு;

### எனது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

*முன்பு நான் எழுதிய மடல் கண்டு உனது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தியிருந்வாய். இது மேலும் எனக்கு உற்சாகத்தை ஏற்படுத்துகின்றது.*

*ஒரு மனிதனுக்கு அறிவூட்டவல்லன நல்ல நூல்கள், இலக்கியங்கள். இவை பல நல்ல கருத்துக்களை எமக்கு உணர்த்துகின்றன. இயல்பிலேயே வாசிப்புத் திறன்மிக்க நீ உயர்ந்த இலக்கியங்களைப் படித்து உன் அறிவை விருத்திசெய்து வருகின்றாய் என்பது எனக்கு நன்கு தெரியும்*

*அன்புத் தங்கையே எமதுதமிழ்மொழியில் உயர்ந்த இலக்கியங்கள் உள. இவை ஒவ்வொன்றும் ஏதோ ஒருவகையில் மனிதமேம்பாட்டுக்கு வழிகாட்டுவனவாகவே உள்ளன. ஆனால் அவற்றை எல்லாம் சிந்தையில் கொண்டு நடந்திடத்தான் எம்மவர்க்கு மனமில்லை. இன்று இலக்கியங்களைப்படிப்பது பரீட்சையை மையமாகக் கொண்டேயன்றி அறிவை வளர்த்துக்கொள்வதற்கன்று. இதனால் எமது மனநிலை பாதிப்புக்குள்ளாகின்றது. எல்லாம் இயந்திரமயமாவது போன்று மனித உள்ளமும் இயந்திரமயமாகி வருகின்றது. இக்காரணம், பொருள் தேடும் முயற்சியில் நாமெல்லாம் ஆலாய்ப் பறக்கின்றோம். உள்நாட்டில் உழைத்திடுவது போதாமையால் எம்மவர் வெளிநாடு செல்கின்றனர். எனவே இன்று மக்களுக்கு வேண்டப்படுவது பணம் பண்ணும் வழியேயன்றி நல் நெறி காட்டும் வழியன்று. இதனால் நல்ல அறிவுநூல்கள் தேடுவாரற்றநிலையில் உள்ளன. நாம். அமைதியாக மகிழ்ச்சியாக வாழவழிகாட்டும். தமிழ் இலக்கியங்களைக் கற்கவேண்டும்.*

*என் கண்ணுக்கு நிகரான தங்கையே! எம்மவர் படைத்தளித்த இலக்கியங்கள் எம்மவர்களின் பெருமைகளையும் உளப்பாங்கையும் உணர்த்துவனவாக உள்ளன. ,யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று கூறிய புலவர் கணியன் பூங்குன்றனார் எத்தகைய உயர்ந்த நோக்குடன் இதனைக் கூறியிருப்பார். உண்மையில் இதேபோன்ற உயர் கருத்துக்கள் எமது இலக்கியங்களில் உள இவற்றை நாம் பேணவேண்டும் படித்துப் பயன்பெறவேண்டும் என்று கூறி இத்துடன் நிறுத்தி மறுமடலில் தொடர்கின்றேன்.*

*இங்ஙனம்*

அண்ணா தமிழ்தாசன்.



காலை மூன்று மணிக்கு எழுந்து, காலைக் கடன்களை முடித்து, தெய்வ வழிபாடாற்றி, தொழிலாற்ற வீரகேசரி காரியாலயத்துக்குச் சென்றும் ஆங்கு எமக்குரிய கடமைகளை காலை நான்கு மணி முதலாக காலை ஏழு மணி வரை பார்த்து, பின் காலை ஆகாரமருந்த 'ஐபா' வீடு சென்று பின்னர் காலை எட்டுமணி முதலாக பதினொரு மணிவரை வேலை செய்து, அதன் பின் மதிய வேளை உணவருந்தச்சென்றும் மத்தியானம் பன்னிரண்டரை மணிமுதல் காரியாலய வேலை காரணமாக அரசாங்க காரியாலயங்களுக்கும் அன்றைய அரசமைப்பில் இயங்கிய அமைச்சர்களைச்சந்தித்தும் விடயங்கள்,

## எழுத்துலக வாழ்க்கை 4

# தாய் தந்த தனம்

தெல்லியூர் செ. நடராஜன்

செய்திகள் சேகரித்தும் பிற்பகல் மூன்று மணிக்குத்திரும்பி காரியாலயம் வந்ததும் பத்திரிகையில் இடைவெளி நிரப்ப பத்திபத்தியாகஎழுதியும் மாலை ஐந்துமணிக்கும்ஐந்தரைக்கும் இடையில் பக்கங்களை பார்த்து ஒப்பமிட்டும்ஒருவாறு பகல் வேலையை முடித்து அதன் பின் வெளியே சென்று திரைப்படங்களோ அல்லது வேறு பொழுது போக்குகளிலோ ஈடுபட்டும் (இப்படி வெளிச்செல்லும் பொழுதெல்லாம் போகுமிடம் விபரம் காரியாலயத்துக்கு தெரிவித்தே செல்லவேண்டுமென எம்மிடம் பெற்ற பத்தாண்டு ஒப்பந்த அடிமைச்சாசனம் கூறியதால் அவ்வாறு செய்தும்) பின்னர் காரியாலயம் திரும்பி விசேட செய்தியிருப்பின் புதிதாக செய்திகள் எழுதியும் இரவிரவாக பத்திரிகையை திருப்பியமைத்தும் காலைக் கொழும்புப்பதிப்பை சிறப்புறவாக்கி வெளியிட்டும் இவ் வேலைகள் முடிய, சில வேளைகளில் நித்திரையுமின்றி மறுநாள் வேலையை தொடர்ந்தும் ஆர்றிய சேவை பத்திரிகைத்தொழில் ஆர்வத்தின் காரணத்தால் எமக்கு பாரமாக தெரியவில்லை. இத்தாலி நாட்டு சர்வாதிகாரி முசோலினி அபிசீனியாவை கபளீகாரம் செய்த காலையில் ஒரு சதத்திற்கு 'அபிசீனியா யுத்தம்' என்று ஒரு துண்டு வெளியீட்டை அமெரிக்க சிலோன்மிஷன் அச்சகத்தில் நானே எழுதி எழுத்துக் கோர்த்து வெளியிட்ட போதிருந்த சந்தோஷம் வீரகேசரியிலும் சுதந்திரன் பத்திரிகையிலும் வேலை பார்த்த காலத்திலும் சொந்தமாக மாத வார வெளியீடுகள் நடத்திய காலத்திலும் இருந்தது மட்டுமல்ல. இக்காலங்களே எமது வாழ்வில் பொற்காலமாகவும் விளங்கியதெனலாம். இத்தகைய பெருவாழ்வுக்கு எமக்கு உரமூட்டி, வழிகாட்டி, அத்திபாரமிட்டு துணை நின்று ஆக்கிப் படைத்தவள் என் அன்னை. அன்னையிடம் நான்

சுற்றவற்றை மற்றும் மக்களோடு கலந்து பகிர்ந்துண்பதில் இன்று எமக்கு தனியின்பம் உண்டு. இன்றைய நாகரிகவுலகில் எத்தனையோ சம்பவங்களைப் பார்த்தும் கண்டும் அனுபவித்தும்விட்டேன் இவற்றிற்கெல்லாம் அத்திபாரமிட்டவள் அன்னை. அவள் தந்த செல்வத்தை இப்பொழுது மக்களோடு பகிர்கின்றேன்.

தியான வாழ்விற்கு அன்று அவள் கூறிய மற்றொரு வியாக்கியானம் ஞாபகம் வருகின்றது. எந்தக் கருமத்தை செய்ய விரும்பினாலும் அதனையே தியானித்து சதாசிந்தித்து, அதனையே நாடி வந்தால் நிச்சயமாக அப்படி நாடியது கிடைத்தேயாகும். இது என் வாழ்க்கையனுபவம் "தியானம் செய்வதற்கு கண்களை மூடிகொண்டுதான் செய்யவேண்டுமென்பது கிடையாது. புலனடக்கத்துடன் வேறெதும் சிந்தனையின்றி ஒரே குறிக்கோளுடன், சுற்றிலும் எல்லாப்பொருள்களும் இருக்கும் பொழுதே நிகழும் சம்பவமாக- எல்லாப் பொருள்களையும் பார்த்தாலும் அவற்றின் நினைவு மனத்தில் பதியாது- அனுபவியாது ஏதொன்றினை உருவாக்கும் ஏகாக்கிர சிந்தையானது- அத்திறனானது கண்களுக்கும் மூளைக்கும் இதயத்துக்கும் குற்றமற்ற புனிதத்தை ஊட்டும். அத்தோடு அமைதியையும் ஊட்டும் இப்பெருமைமிக்கதும் சிறப்புடையதுமான ஒரு நிலையை தியானம் நல்கும் தியானத்தைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கொஞ்சமாக நாம் வெளிச்சூழல் நிலைமைகளிலிருந்து நம்மை உள்ளே இழுத்துக்கொள்ள வேண்டும் சூழ்நிலைமையின் உணர்வு. நமது உடம்பின் உணர்வு, இந்திரியங்களின் உணர்வு, உணர்ச்சிகளைப்புரிந்துகொள்ளும் நிலை ஆதியனவெல்லாம் படிப்படியாக ஒவ்வொன்றையும் மூடி மூடிக்கொண்டுபோய் இறுதியிலே நாம் ஒன்றி நிலைக்கின்றோம். எந்தக் குறிக்கோளை அடைவதற்கு நாம் தியானத்தை மேற்கொள்ளுகின்றோமோ அந்தக் குறிக்கோளைக் கொள்ள எமது செயற்பாடுகள் யாவும் அனுசரணையாகவே இருக்கும் இவ்வாறெல்லாம் வழிகாட்டிய அன்னையை நான் பெற்றதற்கு என்றும் இறைவனை ஏத்தித் தொழுகின்றேன்.

வல்லிபுர ஆழ்வார் திருத்தலவிழா நடைபெற்ற காலம் 1934ம் ஆண்டில் வண்டில் கட்டி குடும்பமாக நாங்கள் எல்லோரும் அதிகாலை நான்கு மணிக்கு நெல்லிப்பழையிலிருந்து புறப்பட்டு விட்டோம் வழியில் களை தெரியாதிருக்க கதைகளை எம் மூத்தோர் கூறிவந்தனர். வல்லிபுரக் கோயில் அமைந்திருக்கும் பிரதேசம் ஒரு காலத்தில் பேரரசு வீற்றிருந்த மனை என்று அன்னையார் கூறியதும் என் மனம் சிலிர்த்துக் கொண்டது. அவர் கூறியவற்றை செவிமடுத்து மனத்தே பதித்துக் கொண்டவை காலகட்டங்களில் வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் பல தடவைகள் கட்டுரைகளாக வெளிவந்தன. பிற்காலத்தில் ஸ்ரீலங்கா என்னும் மாத இதழிலும் சில இத்தலம் பற்றிய கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. சுதந்திரம் என்று மாதா அன்று விளக்கியவற்றை எழுத்திலே இன்று கூட வடிக்கும் ஆற்றல் எமக்கில்லை அத்தனைச் சிறப்பாக இவர் கூறிய கூற்றுக்கள் உள்ளத்தில் அன்றுமுதல் பெருந்தீயாக சுவாலைவிட்டு எரிகின்றது. "எங்கள் மதிப்புக்குரியவர்கள் · எங்கள் – எங்கள் மூதாதையர்கள் இன்று எங்களால் மறக்கப்பட்டு விட்டனர். அவர்களை மறந்து விட்டு, அவர்களது அடிச்சுவடுகளைத் தொடராது, அவர்களது சாம்பர்மேடுகளிலேயே எங்களது வாழ்வு பிறந்து வளம் பெற்றது என்பதை மறந்துவிட்டு வாழத் துடித்துக் கொண்டிருக்கிறோம். "அடிமை" எப்படியிருப்பதெனத் தெரியவிடாது எங்கள் வாழ்க்கை வளமாக சுதந்திரம் வாங்கித்தந்து, சுதந்திரமாக பல்லாண்டுகளாக ஆட்சியமைத்து உலகமே மெச்ச வாழவைத்த அவர்கள், தாமே அடிமைத்தனத்தை அனுபவித்து எங்களை அந்த அடிமைத்தனத்தை அனுபவிக்க விடக்கூடாதென பாடுபட்ட அவர்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் இருக்கின்றதா ?" என்ற கேள்வியை அன்றே என் உள்ளத்தே விதைத்தவர் தாயார். அன்று தாய்தந்த இத்தனம் எங்கள் சரித்திரங்களை துருவித்துருவி ஆராய வைத்தது. இன்றும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன் அதற்கு இன்னும் ஓய்வில்லை ஆனால் ...?

அந்நிய மண்ணிலே அந்நியரோடு, பஞ்சணைகளிலே துயின்று, பாங்காக உண்டு மகிழ்ந்து, புதைகுழிகளைப் பற்றியே சிந்தியாது வாழ்வோர், பல்லாயிரமாண்டுகளாக சுதந்திரமாக வாழ்ந்த தமிழினம் கடந்த பலபத்து ஆண்டுகளாக தடியடிபட்டும் குண்டர்களால் தாக்கப்பட்டுச் சொத்துச் சுதந்திரங்களை இழந்தும், தம் நெஞ்சிலிருந்து குருதி பீறிட்டுப்பாய அக்குருதியிலேயே 'சுதந்திரம்' என்று எழுதிவிட்டு தம்முயிரை மண்ணுக்காக்கிய மக்களின் புதைகுழிகளில் ஒப்புக்காகவேனும் இரண்டு சொட்டுக் கண்ணீர், காணிக்கையாக ஒரு பூ, அந்தச் சவமேட்டுக்கு ஒரேயொரு முத்தம் கொடுக்காது கரந்துறைந்து, பஞ்சணை வாழ்க்கை வாழ்ந்துவிட்டு இன்று தாம் செய்ததாக பல நூறு பக்கங்களில் 'பொய்மையை பெய்து' வடித்து உலகுக்கு படைத்துள்ளதாகச் சொல்லித் திரியும் சொற்கள் எங்கள் நெஞ்சங்களை வாள் கொண்டு அறுக்கின்றன. எங்கள் சுதந்திரத்துக்காகப் புறப்பட்டு இடைநடுவில் வழிதவறியவர்கள் வளர்ந்த ஒருவன் தன் கடமையை எத்தனையெத்தனை பேர்? நாம் தொடர்ந்தும் அடிமைகள்தானா? எம் முன்னோரின் ஆவிகள் மீது ஆணை அவர்கள் சென்ற அடிச்சுவடுகளை உண்மை விசுவாசத்தோடு தொடருங்கள். உண்மையான சுதந்திரத்தை மக்களுக்

காக லென்றெடுங்கள். ஆலயங்களுள் நுழையும்பொழுது ஆலய படிக்கட்டுகளைத் தொட்டு வணங்கினால் பாவங்கள் போகுமென்னும் கூற்று உண்மை அது போல எம் முன்னோரது சாம்பல் மேடுகளை இரண்டு சொட்டு கண்ணீர்விட்டாவது நனையுங்கள். அடையாளமாக ஒரு பூவாவது வையுங்கள் தர்மம் தழைத்தோங்கட்டும் அதர்மம் அழியட்டும். தொடர்ந்தும் நாம் அடிமையாகாது சுதந்திர புருஷராக வாழ்வோம் என்று பிரதிஞ்ஞை எடுத்துக் கொள்ளுங்கள். எம் மூதாதையரை நாம் மறந்துவிட்டதனாலேயே இந்த இழிநிலைமை - அழிவுகள் எமக்கேற்பட்டன உங்கள் ஆன்மா உங்களை ஆளவேண்டும். உங்கள் உடம்பளியும் மனத்தை இறைமயமாக்கி, இறைவன் அருளைப் பெற்று தெய்வநம்பிக்கையோடு நாம் நடந்தோமானால் எந்த இடர் ஏற்படினும் விலகி இடர்களும் இன்னல்களும் நீங்கி சிறப்புற வாழ்வோம்.


அன்பர்கள் ஆதரவாளர்களுக்கு எமது உள்ளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சகல விதமான
ரெடிமேட் ஆடைகளுக்கும்
புடவை வகைகளுக்கும்
குழந்தைகள் சிறுவர்களுக்கான
ஆடை வகைகளுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

காவேரி ரெக்ஸ் ரைல்ஸ்

பஸ் நிலையம்
அச்சுவேலி




# விண்ணை நோக்கும்

– நெடுந்தீவு லக்ஸ்மன் –

இன வெறியைத் தூவிவிடும்
இன வெறியின் ஆட்சி
இனந் தெரியா இனம்நாளும்
ரணம் சுவைக்கும் காட்சி
தினமுமொரு கறைச் சேதி
தீவினைக்கு சாட்சி
தீவெங்கும் புத்த தர்மம்
போதனையில் மாட்சி!

பிணந் தின்னும் சாஸ்திரங்கள்
பற்றி நிற்கும் அரசு
கணமும் ஒரு கதைபேசும்
கயமை புத்த பிட்சு
குணங் கொடியரீ கூண்டினுக்கோ
குற்றுயிரில் இதை
இனந் தமிழர் என்பதனால்
இங்கு நீதி தினுசு

உரிமையெனும் வெளிச்சம் தேடி
உருக்குலையும் எம்மின்
உயிர்க்குடித்து உவகை கொள்ளும்
உணர்விழந்த சாத்தான்
பயிரின் வாட்டம் தீரமேகம்
பாங்காய்த் திரளும் ஓர்நாள்
உயிரின் ஓட்டம் நிமிரும் செடிகள்
உயர்ந்து விண்ணை நோக்கும்!

பண்டை இலக்கியக் காட்சி

# காளையின் கடமை

- எஸ். பி கே.

குழந்தையைப் பெற்று வளர்த்து விட்டால் போதுமா? அப்பிள்ளை சமுதாயத்தில் பண்புடைய மனிதனாக, அறிவுடையவனாக வீரனாக, மற்றையோர் மதித்துப் போற்றப்படுபவனாக விளங்குதல் வேண்டும். இவற்றைப் பிள்ளைக்கு அளித்து சான்றோனாக்குதல் ஒரு தந்தையின் கடமை. பிள்ளை தவறு செய்யும் போது அவனை கண்டித்து வளர்த்தல் தந்தையின் பொறுப்பு. பெற்று வளர்த்தவள் எவ்வளவு அறிவுடையவளாக இருப்பினும் அவளால் பிள்ளையை கண்டித்து வளர்க்க முடிவதில்லை பெற்ற பாசம் தவறுகளை தெரியாதபடி மறைத்து விடும் எனவே தான் மகனைக் கண்டித்து வளர்த்தல் தந்தையின் பொறுப்பு ஆயிற்று இதனை உணர்த்தவே 'சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே' என்றார் பொன் முடியார்.

## கொல்லன் கடமை

அறிவுடனும் பண்புடனும் வளர்ந்த ஒருவன் தன் கடமையை நிறைவேற்ற உதவும் வகையில் சமுதாயம் அவனுக்கேற்ற தொழிலைத் தந்து அதனால் பயனடைய வேண்டும்

கொல்லன் என்பவன் சமுதாயத்தின் இன்றியமையாத தொழிலாளி திண்மையும் வலிமையும் உறுதியும் வாய்ந்த இரும்பு வேலை செய்பவன் அவன் உருவாக்கும் கருவிகளில் சிறந்தது வேல் வெற்றிக்கு உரியது வேல் கொல்லன் வடித்து உதவும் வேல் வெற்றிக்கு வழிவகுப்பதாகும்

இதனையுணர்ந்து பொன் முடியார் 'வெல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்கு கடனே' என்றார்

## வேந்தன் கடமை

சமுதாயத்தில் தனக்கு ஏற்ற தொழிலை மேற்கொண்டு வாழ முனைகின்ற இளைஞனுக்கு நல்வாழ்வு வகுத்தமைத்தல் நாட்டை ஆளும் மன்னனின் கடமை. அவனுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகளை வகுத்துக் கொடுத்து வாழச் செய்தல் அரசின் கடமை என்பது பொருள் இதனையே பொன் முடியாரும் 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' என்றார்

## காளையின் கடமை

என்ற அன்னை சான்றோன் ஆக்கிய தந்தை துணை நிற்கும் சமுதாயம், நல் வாழ்வு அளித்த அரசன் ஆகியோரின் உதவி பெற்ற இளைஞன் அவர்கள் யாவரும் மகிழும் வகையில் வாழ்வில் வெற்றிகாண வேண்டியது அவனது கடமை.

வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம். அவ்வாழ்க்கையில் போராட்டத்தில் வெற்றி காண்பது அவன் கடமை. இதனையுணர்த்த வந்த பொன்முடியார் 'ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக் களிறு எறிந்து பெயர்த்தல் காளைக்கு கடனே' என்றார்.

ஒளி பொருந்திய வாள் வீசி யானையை வென்று மீளுதல் வீரனின் கடமை.

இவ்வாறு அன்னையின் தந்தையின் கொல்லனின் வேந்தனின் காளையின் கடமைகளை விளக்கிய பொன் முடியார் என்ற பெண்புலவர் பாடிய பாடல் இதோ:

''ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே!
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே!
ஒளிறு வாள் அருஞ்சம முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!

## வாசகர் பார்வையில்...

ஈழத்து சஞ்சிகை உலகில் வரவேற்கத் தக்க புதிய நடையை, அமைப்புக்களை புத்தெழில் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. அட்டைப்படம் அர்த்தமுள்ள பல கவிதைகளைக் கூறுகின்றது. அது இதழுக்கு புதுமெருகூட்டுகின்றது. 'இந்த இதழில்' எனும் பகுதி வரவேற்கத் தக்கது. எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி அவர்களைப் பற்றி வாசகர் அறிந்து கொள்ள இது பெரிதும் உதவுகின்றது. தமிழ் நாட்டுப் பழம்பெரும் சஞ்சிகையான கலைமகளிலும் அதன் ஆசிரியர் கி. வா. ஜெகந்நாதன் இப்படி அறிமுகம் செய்து எழுதுவார் அந்நினைவு இது சிறப்பாகத் தோன்றுகின்றபோது நாடளாவிய வகையில் உள்ள நல்ல பல எழுத்தாளர்களின் நல்லாசியும் ஆதரவும் கிடைத்து வருகின்றது என்பதை உணரமுடிகின்றது. மாதாமாதம் வாசகர்களின் கருத்துக் கடிதங்களை பிரசுரிப்பது நன்று.

திருமலை வீதி, ரி. பாக்கியநாயகம்
மட்டக்களப்பு.

# தவிக்கின்றேன்

ராதா நாகலிங்கம்

நெஞ்சம் கொதிக்குதென்றேன்
    நீயோ நெருப்பின் கொடுமையென்றாய்,

நஞ்சமில்லை என்று சொன்னேன்
    தூய்மையுள்ளம் உள்ளதென்றாய்.
தாரகையைக் காட்டி நின்றேன்
    காலையிலே மறையுமென்றாய்

புன்னகையை சிந்துகின்றாய் ஆனால்
    புத்தியில்லை மனிதர்க்கென்றாய்
வித்தாரம் பேசிடுவாய் நானோ
    விளங்காமல் தவிக்கின்றேன்

உத்தமியே என்று சொன்னால்
    குற்றம் உண்டு என்று சொல்வாய்
கடலலையைப் பார்த்திருந்தேன்
    நீயோ கணப்பொழுதில் மறையுமென்றாய்

மல்லிகையில் மணமென்றேன்
    எத்தனை நாள் இருக்குமென்றாய்
நினைவுள்ளவரை என்றேன் நீயோ
    நிலையில்லாப் பேச்சென்றாய்

தாபத்தைச் சொல்லிவிட
    தவியாய்த் தவிக்கின்றேன்
பேதைமனம் நோகுமென்று
    பேசாமல் இருக்கின்றேன்.



31750



# முதுகில் ஊரும் தம்பலப்பூச்சி

கோகிலா மகேந்திரன்

அறிவு பூர்வமாய்ச் சிந்திக்கும் அஞ்சுகா,

நீ பதில் எழுத மாட்டாய் என்று நிச்சயமாகத் தெரிந்த போதிலும் ஒரு எதிர்பார்ப்பு!

சிலவேளை... உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் இருந்து நீ எழுதி விடுவாயோ என்று...!

பலவீனந்தான் ஏற்றுக் கொள்கிறேன்

நானும் ஒரு மனிதப் பெண் தானே? தெய்வப் பிறவியா என்ன? கனவிலே... உன் பதில் உருப் புரியாத மின் காந்த அலைகளாக வந்து என் செவிப்பறையைத் தாக்குவது போல...

மின் காந்த அலை எப்படிச் செவிப்பறையைத் தாக்கும் என்கிறாயா? பரவாயில்லையே.. அறிவு பூர்வமாய்ச் சிந்திக்கும் பெண் என்று உன்னை நான் விழித்ததை மெய்ப்பித்து விட்டாய்.

என்னடி...! அதுதான் கனவு என்றேனே...

போகட்டும்... நனவு நிலைக்கு வருவோம்

நானும் கடந்த ஒரு வாரமாகச் சிந்தித்துப் பார்த்தேன்.

எங்களுடைய இவர் சைவப் புலவர். அருமைத்துரை இருக்கிறாரே... அவர் பாவம்... அருமையான மனுஷன்... தன்னைப் பற்றிப் புகழ்வது இல்லை அடக்கமாக நாலு சமயப் பேச்சுப் பேசிவிட்டுச் 'சிவனே' என்றிருப்பார். யாரையும் குறை சொல்ல மாட்டார். நாங்கள் யாரையும் குறை சொன்னாலும் 'ஓம்' என்றும் ஏற்றுக் கொள்ளார் 'இல்லை' என்றும் மறுத்துரையார்.

வெறுமனே சிரிப்பார்!

ஆமோதிக்கும் சிரிப்பா, அல்லது மறுத்துரைக்கும் சிரிப்பா, நடுநிலைப் பேச்சுவார்த்தைச் சமாதானச் சிரிப்பா என்று கண்டு சொல்ல முடியாது மற்றவர்களின் காரியத்தில் தலையிடார் நகைச்சுவை மருந்துக்கும் இல்லை அவர் ஒருவர்தான் இந்த உலகில் தாழ்வு மனப்பான்மை இல்லாத மனிதர் போல இருக்கிறது.

**அன்றும்** நான் அவருடைய வீட்டிற்குப் போனபோது 'ஈசி செயரில்' படுத்து ஏதோ கற்பனையில் மூழ்கிப்போய் இருந்தார். ஐ... அவர் பகல் கனவு காண்கின்ருர்... மற்றது நான் மறந்துவிட்டேன் பேச்சாளர் என்ருல் இலக்கியத்தில் ஈடுபாடும் இருக்குந்தானே... போச்சு... அப்போது அதுவும் அகப்பட்ட கேஸ்...!

ஆனல் நாங்கள் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ளலாம். தாழ்வு மனப்பான்மை என்பது ஒருவகை மனப்பாங்கே தவிர அது ஒரு மனநோய் அல்ல... ஆ..! பயப்பட வேண்டாம். நாங்க யாரும் மனநோ வைத்திய நிபுணரிடம் போக வேண்டிய தில்லை

அப்படியானுல்...?

இந்த உலகில் தாழ்வு மனப்பான்மை இல்லாதவர்கள் யாரும் இல்லை என்ற முடிவுக்கு நாங்கள் வரலாமா? உனக்குத் தெரிய யாரும் இருந்தால் எழுது அஞ்சுகா...!

எழுத்தாளர் கடல் மைந்தன் எழுப்பிய சிந்தனை எவ்வளவு தூரம் போய் வந்துவிட்டது பார்த்தாயா?

எழுத்தாளர் கடல்மைந்தன்! "குறுகிய எண்ணங்களுக்கு நான் குடை பிடிப்பவன் அல்ல" என்ற தலைப்பில் சென்ற வருடம் ஒரு விழாவில் அவர் பேசிய பேச்சு! ஏன் அந்த நினைவு என் மனதில் அடிக்கடி மத்தளம் கொட்டிக் கொண்டிருக்கிறது?

அவர் பேசும் போது சில இடங்களில் சீற்ற மடைந்தார். தேவையின்றி! அந்தச் சீற்றத்தைப் பார்க்க எனக்குச் சிரிப்பு வந்தது.

மிக அமைதியாகப் பேசக்கூடிய இலக்கிய விழாக்களில் கூட யாரோ ஒரு எதிரி முன்னல் துவக்குடன் நிற்பது போனற கற்பனையுடன் இவர்கள் ஆத்திரப் பட்டு நாய்க்கத்தல் கத்துவது ஏன் என்றும் புரிய மாட்டேன் என்கிறது

எழுத்தாளர் அரலூர் அரவிந்தன் கூடக் கூட்டங்களில் அழகாக பேசுவார். ஒரு முறை அவர் பேசும் போது கருத்துலக நோய்கள் சிலவற்றைத் தொட்டுக் காட்டினுர் வைத்தியர் ஒருவர் உடல் நோய் பற்றி விளக்கம் தரும் போது எவ்வளவு சிறப்பாக இருக்குமோ அதே போல தெளிவாக......

நான் வாய் அகல மலர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். "நாங்கள் எவ்வளவோ காலமாகநடந்து கொண்டிருந்த சரியான தடத்திற்கு எழுத்தாளர் வீரன் பேசின்ருர் இப்போது தான் மெது வாக வந்து கொண்டிருக்கிருர்கள் என்ருர்.

கூட்டம் முடிந்து வெளியில் வந்து நின்ற அவர் என்னைப்



பார்த்து "உங்களைச் சந்திக்கிறதில மகிழ்ச்சி" என்ருர்.

"உங்கட எழுத்து எனக்கு பிடிக்குமெண்டாலும் உங்கடை பேச்சுக்குப் பிறகு தான் நான் உங்கட விசிறியாகி விட்டேன்.

நான் அவ்வாறு சொன்ன போது கோழி முட்டையின் ஓட்டுக்கும் கருவுக்கும் மத்தியில் இருக்கும் முட்டை மென்சவ்வு மாதிரி அவர் மெதுவாகச் சிரித்தார்

அன்றிரவு........

நித்திரை நீண்ட நேரமாய் எனக்கு விடுகதை போட்டு என்னை விழிக்க வைத்துக் கொண்டிருந்த பொழுதுகளில்...,

"நதி எங்கே போகிறது? கடலைத் தேடி என்ற பாடலை எனது உதடுகளில் நான் உக்காரவைத்துக் கொண்டிருந்தேன்

மேகப் புதரில் ஒளிந்து விளையாடும் நட்சத்திர முயல்களை நான் காதல் நினைவுடன் கலைத்து பிடிக்க முயன்ற நாள்கள் முந்நூற்று அறுபத்தைந்துக்கும் குறைவுதான்!

அதற்குள் அந்த முறிவு ஏற்பட்டுவிட்டது. அதன் பிறகு ஓடி மறைந்துவிட்ட கடந்த பத்து வருடங்களை நான் தூய்மையான மனதுடனேயே கழித்து வந்திருக்கிறேன்.

நேற்று இங்கே 'செக்கிங்' வந்தபோது கேட்டான். "ஓம் புருஷன் எங்கேம்மா?"

நான் ஒரு பொய் சொன்னேன்.

"எம் புருஷன் செத்துப் போயிட்டார்"

"பிள்ளை குட்டீங்க இல்லையா?"

"இல்லை"

"பிள்ளை குட்டீங்க வேணுனும் நேத்தி வைக்கலையா?"

"இந்தியாவுக்கு வரலையா?"

"இல்லை"

"ஏ ? பிள்ளை குட்டீங்க மேலே பாசம் இல்லையா?"

இந்தக் கேள்வியுடன் எனக்குள் பயம் தொற்றிக் கொண்டது. இதிலே பயப்படுவதற்கு என்ன இருக்கிறது என்று நீ கேட்கலாம் இங்கு நடந்த பல நிகழ்வுகளின் பின்னணியில் நீ அதைப் பார்க்க வேண்டும்!

சுன்னாகத்திலே ஒரு வங்கியாளர் வீடு – அங்கே சிலரைக் கொண்டுவந்துவிட்டது – அவர்களைப் பார்த்துக் கொள்ளும்படி கூறியது – வங்கியாளர் மனைவி அவர்களைத் தப்பிப்போக அனுமதித்துவிட்டது - இவர்கள் மாலை ஐந்து மணிக்கு வந்தது அவர்கள் எங்கே என்று கேட்டது தெரியவில்லையே நான் சுகமா

யல் வேலையில் இருக்க அவர்கள் கதவைத் திறந்து கொண்டு போய்விட்டார்கள் போல் இருக்கிறது... என அவர் நடித்தது... இவர்கள் வெருட்டியது... வங்கியாளரை அடித்தது...

இவற்றைக் கேள்விப்பட்ட பின்னணியில் இதைப் பார்!

ஆம்...! நாங்கள் கோயிலுக்கும் அங்கும் இங்குமென்று ஓடித் திரிந்து எங்கள் பொருட்களை மட்டும்தான் களவு கொடுத்தோம் என்றில்லை!

நெஞ்சங்களின் நிம்மதியை நிரந்தரமாய்க் களவு கொடுத்துவிட்டுத்தான் நிமிடம் நிமிடமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!

காங்கேசன்துறைக்கு உணவுக் கப்பல் வந்தபோது... நாங்கள் கட்டிக் கொண்ட நம்பிக்கைக் கோட்டையில் பரிய வெடிப்புகள் ஏற்பட்டுவிட்டன.

கோட்டை எப்போதும் சரிந்துவிழுந்து விடலாம்! அரவிந்தனைப் பற்றி நான் எண்ணிக் கட்டிய கோட்டையும் இப்படித்தான் சரிந்து போயிற்று.

“செக்சுவாலிற்றி இஸ் மோர் விகரஸ் இன் அடல்ற்ஸ் லைக் போயெற்ஸ், றைற்றேர்ஸ், அண்ட் மியூசிசன்ஸ்” என்கிறார்கள்.

நான் மிக நீண்ட பத்து வருடங்களை இப்படிக் கழித்துவிட்டது கெட்டித்தனமா? அல்லது விதிவிலக்கா?

“செக்சுவாலிற்றி இஸ் லோவெஸ்ற் இன் சயன்ரிஸ்ற்ஸ் ஃபிலோசபேர்ஸ், இன்ரலெக்சுவல்ஸ் அண்ட் அத்லீற்ஸ்” என்றும் சொல்கிறார்கள்.

அப்படியானால் நானும் ஒரு இன்ரலெக்சுவலோ? ஃபிலோசபியும் சிலவேளை படிப்பேன். ஃபிலோசபராக வந்துவிட்டேனோ? படிக்கும்வரை சயன்ஸ் படித்தேன். இப்போதும் சின்னப் பிள்ளைகளுக்கு ‘சயன்ஸ் ரியூசன்’ கொடுக்கிறேன். ‘சயன்ரிஸ்ற்’ என்ற வரிசையில் என்னைச் சேர்க்க முடியாதா?

ஆனால் நான் நிச்சயமாக ‘அத்லீற்’ இல்லை! விளையாட்டுக்கும் எனக்கும் வெகுதூர இடைவெளி.

மறந்தே போய்விட்டேன்... ‘சயன்ஸ்’ என்ற உடன்தான் நினைவு வருகிறது ‘புதுமை ஒலி’ பத்திரிகை ஆசிரியர் என்னை வாரா வாரம் சிறு குழந்தைகளுக்கான ‘விஞ்ஞானக் கதை’ எழுதித் தருமாறு முன்பு கேட்டார்.

இப்போது பத்திரிகைகள் ஒன்றும் வருவதில்லை.

கீதமிசைத்த குயில்களெல்லாம் மூடர் கையில் விழுந்து போய்விட்டன. ஒரு பத்திரிகையின் ஒரு தாள்... சில காலம் வந்தது.



அதைப் பார்க்க எவ்வளவு ஆவல்!

களவாகப் படிப்பதும் படித்து முடிய நெருப்பில் போடுவதும்... அது ஒருவித மகிழ்வுதான்.

அர்ச்சனை செய்பவனே அர்ச்சனையாகிப் போன அவலப் பூஜையின் பின் அதுவும் நின்று போயிற்று.

வீட்டைவிட்டு வெளியே போகமுடியாமல் வீணே போகும் பொழுதில் ஒரு விஞ்ஞானக் கதை எழுதிப் பார்ப்போம். எதிர்காலத்தில் உதவும்

தம்பியை அனுப்பினால் ‘புதுமை ஒலி’ ஆசிரியரைத் தேடிக் கண்டுபிடித்து, “பத்திரிகை அண்மையில் வெளிவரக்கூடிய சாத்தியக்கூறு உண்டா, பத்திரிகையில் இந்த விஞ்ஞானக் கதை வருமா?”

போன்ற விபரங்களை அறிந்து வருவான்.

நாய் எங்கே அவசரமாய்க் குரைக்கிறது.

பொறு என்னவென்று பார்ப்போம்.

அன்பு நிறைந்த
குயில்

அன்பர்கள் ஆதரவாளர்களுக்கு
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
நவநாகரீக
ஆண், பெண் இருபாலாருக்குமான
சிகை அலங்கரிப்பாளர்கள்
நியூ சிலிங்கோ
சிகை அலங்கரிப்பு நிலையம்
அச்சுவேலி

நகைச்சுவைக் கட்டுரை

# மணியின் மகத்துவம்

ரி. பாக்கியநாயகம்

'மணி' என்னும் சொல்லைக் கேட்டதுமே நம்மில் அனேகரது உள்ளம் கிளுகிளுப்படைந்து முக மலர்ச்சி ஏற்படக் காண முடிகிறது ஏனெனில் உலக வாழ்க்கைக்கு அவசியமானதெனக் கருதப்படுவது இந்தப் 'பணநாதன்' என்னும் 'மணி' தானே ஆனால் நீங்கள் கருதும் அந்த மணி பற்றியதல்ல இந்தக் கட்டுரை. அப்போ நாம் ஆராயவிருப்பது நிச்சயம் பொன்மணியோ, கண்மணியோ அல்லது நாரீமணியோ வென்று அவசரப்பட்டு முடிவு கட்டி விடாதீர்கள். அது கூட இல்லை! அனுதினமும் அதிகாலையிலிருந்து அர்த்தராத்திரி வரை நம் ஒவ்வொருவரையும் ஆட்டிப் படைத்தபடி, எம் காதுகளில் கணீரென ஒலித்த வண்ணம் காட்சிதரும் பல்வேறு மணிகளின் ஓசை பற்றியே சற்றுப் பார்ப்போம்.

இயந்திரம் போன்ற இவ் வாழ்க்கையை இயக்குவதும் கட்டுப்படுத்துவதும் இந்த மணிச் சப்தங்களேதானென்பதை மக்கள் மறக்கவோ மறுக்கவோ முடியாதென்னும் உண்மையை மணி அடித்துத்தான் பறைசாத்த வேண்டுமென்பதில்லை. காலையில் நாம் கண்களை விழித்து தூக்கத்தை விட்டுத் து ளி எழுவதற்குக் காரணமே கோயில்களில் ஒலிக்கும் மணிதானே. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என நம் முன்னோர் காரணத்தோடுதான் சொல்லியிருக்கிறார்கள் போலும். இல்லாவிடில் பொழுது விடிந்த பின்னரும் குறட்டைவிட்டபடி தூங்கி வழியும் கும்பகர்ணர்களை எவராற்தான் எழுப்ப முடியும்!

இப்போதெல்லாம் 'அலாரம்' மணிக்கூடு வந்து ஆலய மணிகளின் வேலைகளைச் சுலபமாக்கி விட்டதென விஷயம் தெரியாதவர்கள் சொல்லக் கூடும். ஆனால் எத்தனை தடவைகளில் அதிகாலை வேளையில் இந்த 'அலாரம்' மணி வேலை செய்யாமல் 'ஸ்ரைக்' செய்து, எமது காலை வாரிவிட்டிருக்கிறது. அதனால் சந்தோருக்கு 'லேட்'டாகி முதலாளி முன் கைகட்டி வாய் பொத்தி நின்ற கதைகள் ஏராளம்!

பாடசாலை மணிக்குப் பதரிப் படித்துக் கொண்டு ஓடும் மாணவர்களிற் பலர் நிச்சயமாக பள்ளிக்கூடம் முடிவதற்கான ஒலிக்கும் மணியை வரவேற்கவே செய்கிறார்கள். இடைவேளை நேரத்தில் அவர்களின் வெளிவரவுக்காகக் காத்து நிற்கும் ஐஸ்பழக்காரரின் மணியோசைக் கேட்கும் எனக்கு, சிறுவனாயிருந்த 'அந்த நாள் ஞாபகம் வந்து' ஆனந்தமளிக்கின்றது.

முன்பெல்லாம் ஒருவரது வீட்டிற்கு விருந்தினர் எவரும் சென்றால், வாசற்படியிலேயே ஒரு 'செருமல்' செருமி தன் வரவை வீட்டாருக்குத் தெரியப்படுத்துவது வழக்கம். ஆனால் இப்போதோ புதுவீடுகள் கட்டுபவர்களெல்லாம் இந்தச் 'செருமல் இருமல்'களுக்குச் செவிசாய்க்க மறுத்து, வாசலிலேயே மின்சார 'கால் பெல்'லை பொருத்திவிடுகிறார்கள்.

'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' எனும் முதுமொழியை அனுபவ ரீதியாக அனேகர் அறிந்திருப்பது சந்தேகமே. முன்பெல்லாம் வீதி தோறும் கோயில் யானைகளும் தென்னந் தோட்டங்களில் வேலை செய்யும் யானைகளும் ஆற்றிலே குளிப்பாட்டப்பட்ட பின்னர் நடத்திக் கொண்டு போகப்படும் காட்சி கவர்ச்சியாகவே இருக்கும் அவைகளின் கழுத்துக்களில் தொங்கவிடப்பட்டுள்ள மணிகளின் ஓசை தெருவெங்கும் ஒலித்து பாதசாரிகளை ஒதுங்கி நின்று பருத்த யானைகளுக்கு வழிவிடுவதற்கு ஏவாக செய்கிறது. பூனைக்கு மணி கட்டுவது யாரென்று எலிகளுக்குள்ளே ஏற்பட்ட பிரச்சனையும் மணியின் முக்கியத்துவத்துக்கு மற்றுமோர் உதாரணமே.

பண்டைய அரச அவைகளில் மணிக்கு மகத்துவம் அளிக்கப்பட்டே வந்திருக்கிறதை நாம் காணலாம். நீதி தவறாத தமிழ் மன்னன் எல்லாளனின் பெருமையை மேலும் ஒருபடி உயர்த்தியது. அரண்மனை வாசலில் அவன் கட்டியிருந்த மணி கன்றைப் பறி கொடுத்த பசுவொன்று மணிக்கயிறை வாயினால் இழுத்து நீதி கேட்ட சம்பவம் நிச்சயம் நெஞ்சை உருக்குவதாகும்

தினமும் தபாற்காரரது சைக்கிள் மணியைக் கேட்க ஆவலுடன் காத்துக் கிடக்கும் நாம், தந்திப் பியோனது மணிச்சத்தம் ஒலித்ததும் தடுமாறி பதட்டமடைகின்றோம். ஆலயமொன்றில் விட்டுவிட்டு அடிக்கப்படும் மணி, யாரோ ஒருவரது ஆத்மா சாந்தியடைந்ததை அறிவித்தபடியிருக்கிறது!

பஸ் வண்டிகளில் பயணம் செய்பவர்களனைவருக்கும் இந்த மணியோசை நன்கு பரிச்சயமானவையேயாகும். வண்டிக்குள் நாம் காலடி எடுத்து வைப்பதற்குள் கண்டக்டர் மணியை அடித்துவிடுவதனால், உள்ளே நுழையும் நம்மிற் பலர், அங்கிருக்கும் பயணிகள் பலரது மடி மீது விழுந்து விளையாடி இடிபடுவதும், அவர்களது வசைமாரியை சரமாரியாக வாங்கிக் கட்டுவதும் மறக்கமுடியா நகைச்சுவைச் சம்பவங்களே!

அலுவலகங்களையும் மணிகள் ஆட்டிப் படைக்கும் சக்தி வாய்ந்தவையேயாகும். ஆனால் அதிகாரிகள் பல தடவை தம் மேசையிலுள்ள மணியை கை நோக நோகத் தட்டினாலும், காரியத்தைச் சாதிப்பது இப்போதெல்லாம் சற்றுக் கடினமாகவே காணப்படுகிறது!

வைத்தியசாலைகளில் நோயாளரைச் சந்திக்க நேரம் குறிப்பிட மணி அடிக்கப்படும் முறை இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல. ஆனால் அன்புக்குரியவரின் கட்டிலருகே அடைக்கலம் புகுந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் அனேகரை வைத்தியசாலைகளில் காணலாம் 'அம்புலன்ஸ்' வண்டிகளின் மணிச்சத்தம் கேட்டதும் ஒதுங்கி நின்று வழிவிடுதல் அவசரமாகச் சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்படும் நோயாளியின் உயிரைக் காப்பாற்றப் பெரிதும் உதவும் பணியேயாகும்.

மணிகள் பற்றி இன்னும் பல மணியான கருத்துக்களை நினைவுபடுத்தி எழுதும் வேளையில், பாருங்கள் இந்தப் பாழும் ரெலிபோன் மணி ஒலிக்கத் தொடங்கி விட்டதை. இனி இந்த மணிக் கட்டுரைக்கு மங்களம் பாடி விட வேண்டியதுதான்.

## வாசகர் பார்வையில்...

புத்தெழிலை தொடர்ந்து படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். எடுத்த எடுப்பிலேயே வாசகரின் கருத்தைக் கவர்ந்துள்ளது புத்தெழில்.

தற்போது தொடராக வரும் கோகிலா மகேந்திரனின் 'முதுகில் ஊரும் தம்பலப் பூச்சி' கதை யாழ்ப்பாண மக்கள் அனுபவித்த துயர வாழ்வை படம் பிடித்துக் காட்டும் வகையில் சிறப்பாக அமைகின்றது. அக்கதை சிறப்புடன் தொடர வேண்டுமென ஆவலுறுகின்றேன்.

செட்டிபாளையம்
மட்டக்களப்பு

S. ரமேஸ்



அறிமுக எழுத்தாளர்

# காலடி வைத்துவிட்டோம்

குமதசாந்தினி சிந்தாமணி

விண் என்னும் கடலினிலே
விளையாடும் வெண்ணிலவே
உருண்டோடி என்னிடமே
சேர்ந்திட மாட்டாயா?

தாரகையின நடுவினிலே தண்மதியாய் நீயிருக்க
தாமரைதான் உன்னைக் கண்டு ஏனோ மனம் வாடுகின்றாள்
ஆரமுதாடடவே ஆம்பல் உன்னைத் தேடுகிறாள்
அள்ளி அணைத் திடவே அல்லி உன்னை அழைக்கின்றாள்

உன்னை நாம் அழைத்தோம் - எம்
ஆசை தீர்க்க மாட்டாயா என்றோம்
நீ உறங்கி விட்டாயோ - என்று
உள்ளம் கலங்குதிங்கே

வண்ண விளக்கே வாகை யோதியே
என்றெல்லாம் அழைக்க - உனக்கு
பெருமையும் வந்திடுதோ - இதனாலேயே
மதிகெட்ட மதியென்று - உன்னிடத்தில்
காலடியும் வைத்து விட்டோம்.

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

## ஸ்ரீ. ஸ்ரீகோகுலன்

பண்டிதர்களின் இலக்கண வலைக்குள் சிக்கித் தவித்து மீள வழியின்றிக் குற்றுயிரும் குலையுயிருமாக அனுங்கிய தமிழ்க் கவிதையைப் பரிவுடன் எடுத்தணைத்துப் புதிய உணர்வும் புதிய சுவையும் புதிய பொருளும் ஊட்டி, அழகு உடை சூட்டி, இனிய நடை காட்டித் தெருவெல்லாம் முழங்கச் செய்த பெருமைக்குரியவன் தேன் தமிழ்க் கவிஞன் பாரதிதாசன்! பாரதிதாசனின் அடியொற்றித் தேன் பரித்துப் பாமலர்ளால் தமிழன்னைக்கு எழில் சேர்க்கும் நவயுகக் கவிஞர்கள் தமிழநாட்டிலும் ஈழநாட்டிலும் பலருளர். அவருடைய இதயத்தின் குரலே "ஆனைப வானில்" எதிரொலிக்கின்றது.

பெண்களை விட்டால் தமிழ்க் கவிஞர்களுக்குக் கவிதையே வராது எனச் சொல்லப்படுவதுண்டு. இதை முற்றாகத் தள்ளவும் முடியாது; முழுமையாக ஏற்கவும் முடியாது. நவயுகக் கவிஞர்கள் சு. வே பஞ்சாட்சரம் அவர்களின் கண்களின் முன்னால் பெண்களே காட்சி தருகின்றனர். ஆனால் பாரதிதாசனுடைய பார்வையோ மற்றவர் கவிதையிலிருந்து வேறுபடுகிறது. பண்பும் கனிவும் பரிவும் நிறைந்த பார்வை அது.

பிரிவின் பெருந்துயரில் பிறந்த பெண்களின் ஏக்கப்பெருமூச்சும் இதயக் கொந்தளிப்பும் நினைவை இழக்குகின்றன நெஞ்சைப் பிழிகின்றன நேர்மை உணர்வில் பிறக்கும் இந்த ஏக்கக் கவிதைகள் எம் நெஞ்சை நிறைக்கின்றன.

வண்டியிற் கிடுகினை ஏற்றிக்கொண்டு நேற்று விடிய தெருவழி சென்ற கணவன், இன்னமும் வீடு திரும்பவில்லை. உயிர்க் கணவனின் பின்னே செல்லத் துடிக்கிறது அவளுடைய மனக்கண் பழக்கமின்மையால் வழி சரியாகத் தெரியவில்லை. முன்னர் அவன் அவளுக்குக் கூறிய சில செய்திகள் அவளுடைய நெஞ்சை இப்போது துளைக்கின்றன வெருண்டடிக்கும் வெள்ளை நாம்பனையும் விழுந்து படுக்கும் கறுப்பு நாம்பனையும் பூட்டிக் கொண்டு சென்றவன் வழியில் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்கின்றானோ! மாடுகளைத் தட்டிக் விட்டுக்கொண்டு போனாலும் கிடுகுகளை விரைவிலே விற்று விட்டுத்தான் திரும்பமுடியுமா? "ஓட்டு வீடே எங்கும் இன்று



ஓலைக் குடிசை பத்துக்கொள்ளு!" அவன் வரும் வரை அவனுடைய குழந்தைகள் சும்மா இருக்கின்றதா? அவளினும் அவள் குழந்தைகளினும் ஏக்கத்தைப் பாரதிதாசனின் கற்பனை சமுத்திரம் இப்படிக் கூறுகிறது.

"எந்த ஊரின் சந்தியில் தான்
இரவு படுத்துத் தூங்கினாரோ?
வந்த மழைக்கு வண்டியின்கீழ்
வாடிக் குந்தி ஏங்கினாரோ?"

இரவில் பிள்ளை கனவில் எல்லாம்
'எங்கே அப்பா!' எனும் ஏக்கம்!
உருக நெஞ்சம் பெருக விழிகள்
ஐயா எனக்கும் ஏது தூக்கம்?"

அமைச்சர் ராசா முகமதுவின் வாயிலிருந்து ...

### புரட்சிக் கவிஞ!!

இருளினை விலக்கினை, விடுதலைப் பாட்டினை,
அருளினைப் பாடினை, இந்த நாட்டினில்
பொதுமையைப் புகுத்திடப் பாடினை! பேசினை
புதுமையும் விளைந்திட வந்தனை, தமிழர்
புகழினைக் காத்தனை! புதுவழி காட்டினை
பொழுதும் முடிந்தது போயினை போயினை
குயிலொலி கேட்டனம் குதூகலம் கொண்டனம்
குயிலும் பறந்திட குலமகள் வருந்தினள்
பரிசாய் வந்தனை பாதியில் சென்றனை
அரசாய் நின்றனை அருந்தமிழ் பாட்டினை
புரட்சிக் கவிஞ! பாரதிதாசனே,
முரசாய் எழுப்பிய புலவ
புரட்சிக் கவிஞ! பாரதிதாசனே!

நெட்டப்பாக்கம் சிற்றூரில் ஆசிரியராக இருந்தபோது பக்கத்து ஊரான பண்டசோழநல்லூரில் சந்திரசேகரன் வீட்டுக்கு அடிக்கடி செல்வார் புரட்சிக் கவிஞர். இவரிடம் சந்திரசேகரனுக்கு அளவிலா பற்றுதல். சந்திரசேகரனின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கிறார் கவிஞர். உள்ளே ஏதோ வர்ணம் தீட்டும் வேலை நடக்கிறது. வர்ணம் அடிப்பவரை அருகில் அழைத்து அட்டை ஒன்றை எடுத்து வரச் சொல்கிறார். பென்சிலால் ஒரு

நொடியில் இலைகள் சூழ்ந்த 'மலர்கள் 'எழுதி'' கத்தரிக் கோல் கொண்டு வெட்டி முடிக்கிறார்.

''இந்த அட்டையைச் சுவரில் வைத்து வெட்டப்பட்ட பகுதியில் பூவையும் இலைகளையும் கொண்டு தொடர்ந்து ஒன்றின் பக்கத்தில் மற்றொன்று வரைந்து முடி கடைசியில். பூவுக்கு வெளிர் சிவப்பும், இலை, கொடிக்குப் பச்சையும் வர்ணம் தீட்டிவிடு'' என்று 'வர்ணக்காரர் அப்படியே எழுதி முடிக்கிறார் இதற்குப் பல நாள் பிடித்தது அவருக்கு!

அந்த ஓவியம், இலையையும், பூவையும் பதித்துச் சுவரில் ஒட்ட வைத்ததுபோல கண்ணையும் கருத்தையும் கவர்ந்து கொண்டிருக்கிறது. கவிஞர் கையால் உருவான இந்தக்கொடி மலர்கள் பளிச்சென இன்றளவும் அந்தச் சிற்றூரில் வீட்டில் எழில் காட்டிக்கொண்டிருக்கிறது.

அழியாத ஓவியமாகத் தம் உள்ளத்தில் கவிதையைப் பதிக்து கொண்டுவிட்ட நண்பர் சந்திரசேகர், இப்போதெல்லாம் தம் வீட்டின் அந்தஅறைக்கு வெள்ளையடிப்பதுமில்லை. வர்ணம் தீட்டுவதுமில்லை ஏறத்தாள நாற்பத்தைந்து ஆண்டுகளாயின கவிஞரின் கைவண்ணம் அங்கே இன்னும் காணப்படுகிறது.

பட்டிக்காடு என்று சொல்வார்களே, அம்மாதிரி ஒருகுக் கிராமம் கூனிச்சம்பட்டு. திருமணமாகாத இளைஞராக இருந்த பாவேந்தர் தமிழாசிரியராகச் சென்று பொறுப்பேற்றார் நிலக்கிழார் வீட்டிலன்றி வேறு எங்கும் உணவு கிடையாது. அந்த அந்த ஊரில் சிற்றுண்டிக் கடையுமில்லை வேறு எவரின் கையையும் எதிர்பார்த்திருப்பது இவருக்கு வழக்கமும் இல்லை! சர்க்காருக் கடங்காத இந்தச் சண்டிக்கு சாப்பாடுபோட எவரும் முன் வரமாட்டார்கள் மாலையில் பாடசாலை முடிவுற்றதும் கோயிலண்டை சென்றுவிடுவார். ஒரு வெற்றிலை பாக்குக் கடையில் ஓரணா நீட்டினால், பதினைந்து முறுக்குத் தருவான் கடைக்காரன் எடுத்துக்கொண்டு கோயில் குளத்தின் படித்துறைக்குச் சென்று துண்டை விரித்துப் போட்டு உட்காருவார்' சிறிது நேரம் மூன்று நான்கு முறுக்கை நொறுக்குவார். பின்னர் விரித்த துண்டில் அண்ணாந்து படுத்துவிடுவார். நீலவானின் எழிற் கோலம் .... இளந் தென்றலின் சிலிர்ப்பு .... வெள்ளி நிலவின் குளிர்ச்சி... தேங்கியிருந்து வரும் பறவை ஒலிகள் அவற்றைப் பார்த்துக்கேட்டு மகிழும் அந்தக் கவியுள்ளம் இதற்குள் அத்தனை முறுக்கும் தின்று முடிந்திருக்கும் எழுந்து குளிர்ந்த நீரை வயிறாரக் குடித்துவிட்டுத் துண்டோடு புறப்படுவார் பாடசாலைத் தெருக்குறடோ. தோம்பா வயற்காடோ படுத் துத்தூங்குவார்



சென்னை வானொலி நிலையத்தின் தொடக்க காலம் தமிழ் இலக்கியம் பற்றிய திறனாய்வு ஒன்றைக் கூறிமுடித்தார். பேராசிரியர் கே சுவாமிநாதன்.

புதுவையில் இந்தச் சொற்பொழிவைக் கேட்ட கல்வித் துறை அதிகாரிகளில் சிலருக்கு நெஞ்சில் ஒரு ''நமைச்சல்'' ஏற்பட்டது ஒருவர் மட்டும் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். அடுத்த சில நாட்களில் நெட்டப்பாக்கம் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கே அந்த அதிகாரி ஆய்வுக்குச் செல்கிறார்

எப்போதும் அதிகாரிகள் வந்தால் சுப்புரத்தினத்துடன் (பாவேந்தர்) நைந்து குழைந்து கேள்விகள் கேட்பார்கள். எவரைப் பற்றியும் கவலைப்படாமல் தம் போக்கில் விடையளிப்பார் சுப்புரத்தினம். அந்தத் தடவை புதுமையான ஒரு நிகழ்ச்சி நடந்தது

'சுப்புரத்தினம்' உன்னை இந்தக் கிராமத்தில் போட்டு வைத்திருப்பது சங்கடமாகத்தானிருக்கிறது'' என்று பரிவுடன் கூறினார் கல்வி அதிகாரி

''இதைவிட வசதியற்றகிராமம் ஒன்றுமில்லை. அதனால்தான் என்னை இந்தக்கிராமத்தில்போட்டிருக்கிறார்கள்' என்கிறார் கவிஞர் குத்தலாக அதிகாரியின் முகக்குறி மாறிற்று

''ரேடியோவில் தமிழ் இலக்கியத்தைப் பற்றி பேராசிரியர் சாமிநாதன் பேசினார் பாரதிதாசன் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர் அப்படின்னு சொன்னார் இதைக் கேட்ட பிறகு உன்னை கிராமத்தில் போட்டு வைச்சிருக்கிறது தப்பு என்று தெரிகிறது எனக்குப் புதுச்சேரிக்கு உன்னை மாற்றிட நான் ஏற்பாடு செய்துட்டேன்'' என்றார் கல்வி அதிகாரி.

அதன்படியே அடுத்த சில நாட்களில் புதுவைக்கு மாற்றப்பட்டார் கவிஞர் கவிஞரின் அலுவல் ஆண்டுகள் 38. இதில் 30க்குமேற்பட்ட மாற்றங்கள்; மூன்று நான்கு வேலை விலக்கங்கள். பதவி காலத்தில் ஒரு ஊதிய உயர்வு

---

புத்தெழில் இங்கே கிடைக்கும்
உதயன் புத்தகசாலை
பிரதான வீதி,
பருத்தித்துறை.

# "உயர்ந்தவன்"

சி. தமிழ்ப்பிரியை

பரீட்சை நெருங்கிக்கொண்டு இருக்கின்றது. நிருஷா புத்தகங்கள், குறிப்புக்கள் முதலியவற்றை மேசையில் அடுக்கிவிட்டு படிப்பில் மும்முரமாக ஈடுபட்டாள். அவள் திருக்கரமானது இடை இடையே தன் நெற்றியை வருடிய வண்ணம் இருக்கிறது ஜன்னலுக்கூடாக தென்றல் காற்று அவள் பூமேனியைத் தழுவிச் செல்கின்றது.

மாடிப் படிகளில் யாரோ வரும் காலடியோசையும் 'நிருஷா' எனும் ஒலியும் அவள் படிப்பை தடை செய்கின்றன. அவள் நிமிர்ந்து நோக்கினாள். வாலிபத்தின் அழகைச் சிமிட்டும் அரும்பு மீசை, புன்னகை தவழும் பூவிதழ், களை சொட்டும் முகம், கலியுக மன்னன்போல் காட்சி கொடுத்தான் ஓர் இளம் குமரன். அவன்தான் நிருஷாவின் பெரிய அத்தான் சேகர். எந்நேரமும் கலகலப்பாக மிளிரும் தன் பெரிய அத்தானைக் கண்டதும் அவள் தம்பி அவள் சின்ன அத்தானான சங்கரை நினைக்காமல் இருக்க முடியவில்லை. சங்கரும் அண்ணாவின் அழகிற்கு சளைத்தவனல்ல. அவன் சுந்தர ரூபமும், அலைகளற்ற பரந்த கடலின் அமைதியும் அவள் இதயக் கண்ணில் தோன்றி அவளுக்கு கிளுகிளுப்பை உண்டாக்குகின்றது.

'என்ன நிருஷா!' அப்படியே இருக்கிறாயா; ஒரு அத்தான்...... அதுவும் உன் வருங்கால இன்ப வாழ்க்கையில்......' சேகர் சொல்லி முடிக்காமலேயே ஓர் புன்னகையை தன் உதட்டின் மூலம் வெளிப்படுத்தினான்.

'பெரிய அத்தானல்லவா நீங்கள்' என்று கூறிவிட்டு சடக்கென எழுந்தாள் சிறுவயது முதல் அவனுடன் பழகி இருந்தும் அவளுக்கு அவனுடன் தனித்திருக்க கூச்சமாக இருந்தது. 'இருங்கள் அம்மாவை அழைத்து வருகிறேன்' என்று கூறிவிட்டு ஓட முயன்ற அவளை 'என்ன நிருஷா இது? நீ படித்த பெண்ணல்லவா? இங்கே வா! அம்மாவும் வேண்டாம் ஆட்டுக்குட்டியும் வேண்டாம்' எனும் பெரிய அத்தானின் பதில் அவளை தடுத்து நிறுத்துகின்றது. இந்தா என் பொங்கல் பரிசு; என் அன்புக் காணிக்கை எடுத்துக்கொள் எனக் கூறிவிட்டு அங்கிருந்து சிட்டாய்ப் பறந்தான் சேகர்.

நிருஷாவிற்கு சுயவுணர்வு வர சிறிது நேரம் பிடித்தது. அவன் கூறிய 'பொங்கல் பரிசு' எனும் ஒலிதான் அவள் காதில் விழுந்தது மற்றொன்றும் கேட்கவில்லை. அவன் கூறிய வாக்கியங்கள் அவள் இதய மலரை வாள் கொண்டு அறுத்தன. உடல், உள்ளம் இரண்டும் ஒருங்கே பதறியது. அவள் பதட்டத்துடன் அப்பொங்கல் பரிசை பிரித்துப் பார்த்தாள் வைர நெக்லஸ்! அதில் 'நிருஷா — சேகர்' எனும் நாமம் பொறிக்கப்பட்டிருந்தது. அவள் மனம் ஏங்கி விடுகின்றது. அத்துடன் இருந்த கடிதத்தை பரபரப்புடன் படித்தாள்.

என் இதய ராணி நிருஷாவிற்கு,

என் இதய வானில் ஒளி காலும் நட்சத்திரமாய்த் திகழும் உன்னை நான் என் மனைவியாக அரவணைப்பது எப்போது? அந்த நன்னாளை நான் எதிர் பார்க்கிறேன். எங்களை நம் பெற்றோர் தங்க இதயத்தில் சேர்த்து வைத்திருக்கிறார்களே தவிர இன்னும் அவர்கள் செயலில் இறங்கவில்லையே! உன் அப்பாவிடம் கூறி இதற்கு அனுக்கிரகம் செய்யமாட்டாயா?

உன் அத்தான்
சேகர்

நிருஷாவின் மலர் விழியிலிருந்து நீரானது உருண்டோடியது. பாவம் நிருஷா அவள் ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றை நினைக்கின்றதே!...... இப்பரிசு சேகரின் முதற் பரிசு அல்ல இதற்கு முன்பும் எத்தனையோ கடிதங்கள், பரிசுகள் அவளுக்கு சேகரால் அளிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் 'நன்றி' என்ற மூன்றெழுத்தில் பதிலுரைப்பாள். ஆனால் அவற்றை நிராகரிக்க அவளுக்குத் தைரியமில்லை அவள் பெற்றோரோ அதை அமோதிப்பவர்கள்போல் பேசாமலிருந்தனர். சேகரைப் பற்றியதும் சங்கரைப் பற்றியதுமான சிந்தனைகள் அவள் இதயத்தில் நகர்ந்து கொண்டு இருந்தன.

ரங்கநாதன் ஒரு பேராசிரியர். அவரின் ஏக புதல்விதான் நிருஷா. அவள் பெற்றோரின் அன்பு மழையிலும் பண மழையிலும் ஊறித் திளைத்து வளர்ந்தாள். நிருஷாவின் தாயாரான லட்சுமிக்கு சிவராமன் என்றொரு சகோதரர். அவர் வங்கியில் லிகிதராக பணி புரிபவர் ஒரு நாள் அவர் மனைவி திடீரென மாரடைப்பினால் விண்ணுலகை எய்தினார். இதனால் சிவராமன் மிகவும் வேதனை அடைந்தார் பிள்ளைகளுடன் கஷ்டப்பட்டார். இது சகோதரியான லட்சுமிக்கு பொறுக்கவில்லை. கணவனிடம் கூறி சகோதரரின் இரு ஆண் பிள்ளைகளையும் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டாள். உழைப்

பின் காரணமாக சிவராமன் தன் ஊரிலேயே இருந்தார்.

சேகரும் சங்கரும் மாமி வீட்டில் நிருஷாவுடன் சேர்ந்து விளையாடி குதூகலமாக பொழுதைக் கழித்தனர். சகோதரர் இருவரும் அவள் மேல்போட்டி போட்டாற்போல் அன்பு செலுத்தினர் எனினும் நிருஷாவிற்கு இளையவனான சங்கரில் இனந்தெரியாத அன்புணர்ச்சி ஏற்பட்டது. சேகரிடத்தில் சகோதர பாசமும் மரியாதையும் தலை தூக்கின.

கால சக்கரம் சுழறன்து. நிருஷா பருவ மங்கையாகி அஜந்தா ஓவியம்போல் திகழ்ந்தாள். அவளின் அறிவு, அடக்கம், அமைதி என்பன அவளுக்கு புதுமெருகூட்டின. அத்துடன் 'சங்கர் - நிருஷா' இருவருடைய அன்பும் காதலாக மலர்ந்தது.

சேகர் திறமையாகப் படித்து டாக்டராகி பேரும் புகழும் பெற்றான். ரங்கநாதனுக்கும அவன் மேல் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டதோடு அவனைத் தம் அருமைப் புதல்விக்கு மணாளனாகக விரும்பினார். இதைச் சந்தர்ப்பம் கிடைத்தபோது சேகருக்கு தெரியப் படுத்தினார் 'கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா? மாமா' என்று கூறி வெட்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் சம்மதித்தான். இதை தற்செயலாகக் கேட்டுவிட்ட நிருஷா மனங் குமுறினாள் உளன்றாள். என்ன செய்வதென்றே தெரியவில்லை. பெற்றோரிற்கு அடங்கிய பிள்ளையல்லவா! எதிர்த்துப் பேசவும் முடியவில்லை. அவளுக்கு வாழ்க்கையே கசந்தது அவளின் மன வேதனையைப் போக்க மருந்து சின்ன அத்தானிடம்தான் இருக்கிறது. ஆனால் அவன் தானே எங்கு என்று கூடத் தெரியாமல் மறைந்துவிட்டான்.

சிறுவயது முதலே சங்கருடன் கூடிச் சிரித்து, கொம்மாளம் அடித்து வாழ்ந்த அவள் அவனை நினைத்ததும அந்தச் சம்பவம் அவள் மனத் திரையில் விழுகின்றது.

ஐந்து வருடங்களுக்கு முன்...

சேகர் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்த காலம் ஆனால் சங்கர் எஸ். எஸ் சி. கூடப் பாஸ பண்ணவில்லை நண்பர்களுடன் ஊர் சுற்றுத் திரிந்தான இதனைக கண்ட மாமனார் ரங்கநாதன் சங்கரைக் கடுமையாகப் படித்து கிழித்துவிட்டார் பிரபு, அதுதான ஊர் சுற்றித் திரிகின்றார் அந்த அருமையான பிள்ளைக்கு வாய்த்தானே ஒரு அருமைத் தம்பி என்று கேலியாகக் கூறினார். உடனே வீட்டைவிட்டுக கோபத்துடன் கிளம்பிய சங்கரை நிருஷாவின் அன்புவலை தடுத்து நிறுத்த முற்படுகிறது. அப்பா உங்கள் நன்மைக்குத்தானே இப்படிக் கூறினார், இதற்கும் கோபிக்கிறதா என்றாள். தன் தவறை உணர்ந்த சங்கர் ''என்றோ ஒரு நாள் நல்ல மனிதனாக உன் முன் வருவேன்' கவலைப் படாதே'' என்று கூறிவிட்டு தன் பயணம் தொடர்ந்தான் ...

சங்கரின் விடாமுயற்சியால் அவன் சொற்ப காலத்திலேயே சப் - இன்ஸ்பெக்டராகி பெரும் புகழ் அடைந்தான். ஆனால் பாவம் நிருஷா அவன் மனதில் அடிக்கடி உதயமாகி அவனை படாதபாடு படுத்தினாள்.

திடீரென லட்சுமி நோய் வாய்ப்பட்டாள். அவள் தன் மகளின் திருமணத்தைக் கண் குளிரப் பார்க்க வேண்டுமென விரும்பினாள். அவளுக்கும் சேகரில் தான் பிரியம். இதனால் விவாகப் பேச்சு ஆரம்பமானது.

சேகர் அந் நன்னாளுக்காகக் காத்திருந்தான். ஆனால் நிருஷா தனிமையில் தத்தளித்தாள், துடித்தாள். எல்லோரின் அன்பும் சேகரிடம் சென்றுவிட நிருஷாவின் அன்பு மட்டும் சங்கரிடம் செல்கின்றது. தன் கவலையை ஆற்ற தன் சின்ன அத்தான் தன்னருகில் இல்லையே என ஏங்கினாள். என்ன செய்வதென்று அறியாது யோசனையில் ஆழ்ந்தாள்.

திருமணத்திற்கு இன்னும் ஒரு வாரமே இருந்தது. சேகர் தன் அறையில் இருந்தபடியே நிருஷாவைத் தன் மனக்கண்ணில் ரசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ''அண்ணா' எனும் குரல் கேட்டு தன் சுய நினைவிற்கு மீண்டான். சங்கர் தன் சொந்த ஊரிற்கு வேலை மாற்றலாகிவிட்டதால் இங்குவர முடிந்தது எனக் கூற சேகரோ தன் தம்பியை ஐந்து வருடத்தின்பின் கண்டதையிட்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். எப்படி எங்களை விட்டுச் செல்ல உனக்கு மனம் வந்தது'' என்று தம்பியை அன்புடன் வினவினான் விதி எம்மைப் பிரித்துவிட்டது அண்ணா! ஒரே ஒருவரை மட்டும் விட்டுப்பிரிய முடியவில்லை என்றான். யாரை என்று கேட்ட சேகர் தம்பியின் பதிலான ''நிருஷாவைத்தான்'' என்பதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். அண்ணனின் காதலில் தம்பியும் போட்டியா! இத்தனை காலமாகப் போற்றி வரும் காதல் ஒருதலைக் காதலா? வேதனை குடிகொண்டது. அவன் நெஞ்சில் அவன் என்ன செய்வான் பாவம். ஒரு பெண்ணின் மனதை அறியாமல் காதலிக்க முற்பட்டது எவ்வளவு பாரதூரமான குற்றம். வலுக்கட்டாயமாக மற்றவர் அன்பைத் தன் மகிழ்ச்சிக்காக அடைய முயல்வதுதான் நேர்மையா? என்ன பேதமை.

டாக்டர் சேகர் சிலையானான். அவனை வாசலில் கேட்கும் மணி ஓசை அழைத்தது. ஓடிப் போய் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்தான். என்ன ஆச்சரியம். நிருஷா அல்லவா எழுதி இருக்கிறாள். அவனின் கரங்கள் நடுங்கின. இதயம் படபடத்தது. பெண்ணின் சக்தியினால் உலகமே இயங்குகின்றதோ?

கனம் அத்தானுக்கு,

என் அன்பான வந்தனங்கள். இக்கடிதம் கண்டு நீங்கள்

திகைப்படைவீர்கள். நீங்கள் மனதாலும் நினைத்திருக்க - கேட்கவும் விரும்பாத ஒரு செய்தியை இன்று சொல்லப்போகிறேன். தயவு செய்து மன்னிக்கவும்' ஒரு பெண்ணிற்கு தன் விருப்பத்தைக்கூற சுதந்திரம் உண்டல்லவா? மனம் விட்டுச் சொல்கிறேன். எனக்கு உங்கள்மேல் எவ்விதமான அன்பும் இல்லை. சகோதர பாசத்துடன்தான் ஒழுகினேன். காதலின் வேகத்தில் இயங்கிய நீங்கள் எப்பொழுதாவது என் அபிப்பிராயத்தைக் கேட்கவில்லையே. இதயத்தின் இயற்கை அமைப்பை அறிந்த நீங்கள் இதயத்தின் இதயமாக இருக்கும், உள்ளப்பாங்கை டாக்டராலும் அறிய முடியாது என்பதை நிரூபித்துவிட்டீர்கள்.

என் உள்ளம் சங்கரை என்றோ பற்றிக்கொண்டது அது போல்தான் அவரும் ... புக்கேற்ற பண்புடன் வாழும் நீங்கள் - பெண்களை மதிக்கும் நீங்கள் சங்கரையும் என்னையும் சேர்த்து வைப்பீர்களா?

அன்புள்ள
நிருஷா

சேகரின் கண்ணினின்றும் கண்ணீர் சொட்டுகிறது. பிழை செய்ய எண்ணிய என்னைக் காப்பாற்றிய நிருஷாவின் வாழ்விற்கு கட்டாயம் நான் உதவி செய்யத்தான் போகிறேன் எப்படியும் உன் வாழ்க்கைக்கு வழி சமைப்பேன், என்று அவன் தன்னுள் தீர்மானம் செய்துகொண்டான். அவன் இதயம் தெளிவாகியது. சிறிது நேரத்தின்பின் வந்த சங்கர் அண்ணு சந்தோஷமாக இருப்பதைக் கண்டு காரணத்தைக் கேட்டான் ''மாமா வீட்டை விட்டு விரக்தியுடன் வெளியேறிய நீ, மாப்பிள்ளையாக அங்கு போகப்போகிறுய்'' என்பதை நினைக்கத்தான் சந்தோசமாக இருக்கிறது என்றுன்.

''என்ன! மாமா சம்மதிப்பாரா அண்ணு! என் காதல் கைகூடப்போகிறதா! நான் பாக்கியசாலிதானா;; என்று துள்ளிக் குதித்தான். சேகர் தன் அப்பாவையும் கூட்டிச் சென்று ரங்கநாதனிடம் இதைப்பற்றிக் கூறினுன்'' ரங்கநாதனுக்கோ சேகரை விட்டுவிட மனமில்லை. எனினும் சேகரின் வேண்டுகோளுக்கு இணங்கச் சம்மதித்தார். மனதிலே துரோகமில்லாமலில்லை. ''தம்பி! உன்னைப்போல பண்புள்ள பையனை மருமகனுக்க விரும்பினேன். ஆனுல் அவள் இதயம் சங்கருடன் ஒன்றியது! அதன் விதி அப்படி நீ நிருஷாவை எவ்வளவு ஆழமாகக் காதலித்தாய் என்று எனக்குத் தெரியும்தான். ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றை நினைக்கிறதே. ஆனுல் நீயோ உன் ஆசையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு தம்பி வாழவேண்டும என நினைக்கிறுய். உண்மையில் நீ ''உயர்ந்தவன்'' சேகர்! ''நீ உயர்ந்தவன்'' இவர் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர்க் குமிழ்கள் கோலமிட்டன.



# இணையும் இராகங்கள்

ஒரு குயில் அழுகிறது!
தினமும் கண் விழித்து
முகம் துடைக்கத் தெரியும்-
பெரிய யன்னல் பரப்பை
ஆக்கரமித்துள்ள வாகை மரத்தில்
வாலை உயர்த்தி மடித்து
வயிற்றை ஏற்றி இறக்கி
சிவப்புக் கண்களை அசைத்து உருட்டி
நீளமாய் கூவி அழுகிறது!

மெல்ல எழுந்து
ஜன்னல் கம்பிகளினிடையால்
பார்வையை தூது விடும் போது
நெஞ்சக் கடலில் ஒரு தவிப்பு
நின்றிருந்த அலைகள் மீண்டும்
மெலிதாய் அசைந்து எழுந்து
பரவி விழுந்து ...... பேரிரைச்சலுடன்...

'சூ' என்று துரத்த அது
பறந்து சுழன்று வந்து
வடக்கு வாய்க்கால் கரையில
கல்லுக் குவியலின் உச்சியில் நின்று
மீண்டும் அழுகிறது!

யாரை இழந்து விட்ட சோகம்?
மனதை இழ்ந்தாயோ- என் போல
மன்னனையே இழந்தாயோ?
என அன்புக் குயிலே! நீ கூவு
சக்தியிழந்து என் போல்
ஊமையாகி விடாமல்- நீ
சோகம் தீரும் வரை கூவு

மனக் கதவைத் திறந்து கொண்டு
ஜன்னலை மூடி விட்டு
உள்ளே நுழைந்த பின்பும்
கூ கூ குரல் மட்டும்
காது வழி நுழைகிறது!
நெஞ்சத்தின் நரம்புகள்
ஒவ்வொன்ருய் ஸ்ருதி சேர்க்க
கண்களை மூடுமையில்
என்னையும் அறியாமல்
கண்ணீர் வழிகிறது;

## வாசகர் பார்வையில்.........

புத்தெழில் இதழைத் தொடர்ந்து வாசித்து வருகின்றேன். இத்தகைய சஞ்சிகைகளின் மிக முக்கியம் சக்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்தது போன்று பல சுவையான விடயங்களைத் தாங்கி வருகின்றது. இச்சஞ்சிகை பரந்துபட்ட மக்களுக்கும் கிடைக்க வழி செய்தால் எம்போன்று பலரும் நன்மையடையவாம். இடம்பெறும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் தரமானவையாக உள்ளது. இதனல் புத்தெழில் தரமான சஞ்சிகையாக தொடர்ந்தும் விளங்க வேண்டும் என்பது எம் விருப்பம். மக்கள் பயன்பெறும் வகையில புத்தெழில் சிறப்புற வாசகர் அனைவரும் பேராதரவு நல்க வேண்டும்.

இணுவில் — முரளி பிரேமா

## குழந்தைக் கவிஞருக்கு மனமுருகும் அஞ்சலி

குழந்தைக் கவிஞர் எனப் போற்றப்பட்ட கவிஞர் 'அழ வள்ளியப்பா' மறைந்துவிட்டார். குழந்தைகளுக்கான கவிதைகளைப் பாடுவதில் சிறப்புப் பெற்ற இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட குழந்தைக் கவிதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார் பல குழந்தைகளுக்கான பத்திரிகைகளுக்கும் ஆசிரியராக இருந்துள்ளக்ர். இவரின் மறைவு இலக்கிய உலகிற்கு குறிப்பாக குழந்தை இலக்கியத்துறைக்கு பேரிழப்பாகும்

- ஆசிரியர் -



# "பெண்ணின் பெருமை"

"மங்கையராகப் பிறப்பதக்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

- தமிழினி -

என்ற பாடலில் இருந்தே பெண்ணின் பெருமை புலனுகின்றது. பெண் என்பவள் அன்பு வடிவமானவள். பெற்ருேருக்கு நல்ல மகளாகவும், கணவனுக்கு நல்ல மனைவியாகவும், பிள்ளைகளுக்கு அன்புமிக்க தாயாகவும் ஒரு பெண் விளங்குகின்ருள்

பிறர் தனக்கு எவ்வளவு இன்னல்களைத் தந்தபோதிலும் அவற்றை எல்லாம் "அகழ்வாரைத் தாங்கும் நிலம்" போலப் பொறுமையுடன் தாங்கிக் கொள்கிருள் இந்தப் பொறுமையை அவள் தன் தாயிடமிருந்தும், நல்லாசிரியர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளுகின்ருள்.

நாம் பிறந்த. நாட்டைத் தாய்நாடு என்று தான் அழைக்கின்ருேமே தவிரத் தந்தை நாடு என அழைப்பதில்லை. அதே போல நாம் பேசும் மொழியையும் தாய்மொழி என்றுதான் அழைக்கின்ருேம். அதன் மூலம் பெண் என்பவள் சமூகத்தில் எவ்வாறு முதலிடம் பெறுகின்ருள் என்பதை அறிந்துகொள்ளலாம். நல்ல மனைவியானவள் தன் கணவனைத் தெய்வமாகப் போற்றுகிருள். தாயானவள் பிள்ளைகளின் நலனுக்காகத் தன் உடல் வருத்தங்களையும் பொருட்படுத்தாமல் பாடுபடுகின்ருள். அவளுக்குத் தன் பிள்ளைகள் கல்வியறிவிலே சிறந்து வாழ வேண்டும் என்ற ஆவலே மேலோங்கி நிற்கிறது.

ஆரம்பக் காலத்திலே பெண் அடிமைகளாகவே கருதப்பட்டனர். இன்றும் சில இடங்களில் இப்படி நிகழ்கின்றன. வெளியே சென்று கல்வி கற்கவோ அல்லது ஆண்களுடன் பேசுவதற்கோ அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. பிற்காலத்தில் பாரதியின் உணர்ச்சிமிக்கப் பாடல்களால் உணர்வு வரப்பெற்ற பெண்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி ஓரளவு வெற்றியும் கண்டனர். இவர்களின் வெற்றிக்குத் தடையாக உள்ள காரணிகளாக வரதட்சணையையும், மூடப்பழக்கவழக்கங்களையும் கூறலாம்.

தற்காலத்திலே பெண்கள் ஆண்களுக்குச் சமமாக உத்தியோகம் பார்க்குமளவுக்கு உயர்ந்துவிட்டனர். எங்கும் தனியே போவதற்கும் அவர்

களுக்குத் துணிச்சல் வந்துவிட்டது. இது பெண்களுக்குப் பெருமையைத் தேடித் தருவதாகும். ஆரம்ப காலத்தில் துணிச்சல்மிக்கப் பெண்களுக்குச் சமூகம் மதிப்பளிக்கவில்லை. காலப்போக்கில் துணிச்சல் தான் வெற்றியைத் தேடித் தரும் என்பதைச் சமூகம் உணர்ந்து கொண்டது.

பெண்களால் இயலாதது எதுவுமே இல்லை எனலாம் அவர்களால் காவியங்களைக்கூடத் தோற்றுவிக்கமுடியும். உதாரணமாக இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் எடுத்துக்கொள்ளலாம் சீதை மேல் இராவணன் கொண்ட தகாத ஆசையினால் தான் இராம-இராவண யுத்தம் நிகழ்ந்தது. இதேபோல சூதாட்டத்தில் தருமனால் இழக்கப்பெற்ற பாஞ்சாலி மேல் துரியோதனன் கொண்ட தகாத ஆசையால் பாரதப்போர் நிகழ்ந்தது. சீதையும், பாஞ்சாலியும் பெண்கள் தான். இவர்கள் வ் வடிவில் எமக்குச் சிறந்த காவியமான இராமாயணமும் கிடைத்தற்கரிய நூலான பகவத்கீதையும் கிடைத்திருக்கமாட்டா இவ்விலக்கியங்களை எமக்குத் தந்த பெருமைக்குரியவர்கள் சீதையும், பாஞ்சாலியுமே.

ஐம்பெரும் காப்பியங்களிலும் சீவகசிந்தாமணியைத் தவிர ஏனையவை பெண்களைப் பற்றிச் சிறப்பாகக் கூறுவனவாகவே உள்ளன. எனவே சகல இலக்கியங்களிலும் பெண் முதலிடம் பெறுகிறாள்.

இன்று பெண்களின் பெருமையைக் குறைப்பதற்காகவே சினிமா தோன்றியதெனலாம் தரங்குறைந்த ஆபாசப் படங்கள், கவர்ச்சிப் படங்கள் பெண்ணின் பெருமைக்குக் களங்கம் விளைவிப்பனவாக உள்ளன. இவை முற்றாக நீக்கப்படவேண்டிய ஒன்றாகும். தரங்குறைந்த படங்களில் நடிக்கும் பெண்கள் சமூக சீர்திருத்தப் படங்களில் நடித்தால் அவர்களுக்கு மக்களின் ஆதரவு நிச்சயமாக ஏற்படும். பெண் ஒருநாளும் விளம்பரப் பொருளாகக்கூடாது. இது பெண்ணினத்தை இழிநிலைக்குக் கொண்டு வந்துவிடும்.

''ஒரு ஆணின் வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண் எப்போதும் இருப்பாள் என்று அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார். உதாரணமாக வாசுகி உறுதுணையாக இருந்ததனால்தான் வள்ளுவரால் திருக்குறளையே எழுத முடிந்தது என்பதை எடுத்துக் காட்டலாம்.

எனவே பெண்ணானவள் அன்பின் இருப்பிடமாகவும், பொறுமையின் சிகரமாகவும் பிறருக்கு நல்ல வழிகாட்டியாகவும் வாழ்ந்து பெண்ணினத்திற்குப் பெருமைதேட வேண்டும்.



# எழுத்தாளனின் வன்மை

- ஞானா -

உலகில் கூர்மை வாய்ந்தது 'பேனா முனை; ஆயுத முனையிலும் சக்தி வாய்ந்ததாக அதனைக் கருதுவதற்குக் காரணம் அது நிலைத்துநிற்கும் எழுத்தைப் படைப்பதேயாகும். பல அரசர்கள் மகான்கள் வாழ்ந்து மறைந்து போனார்கள். அவர்களின் வாழ்வு மறைந்த போதிலும் அவர்தம் புகழ் வரலாறு இன்றும் நிலைத்து நிற்கச் செய்தது எழுத்தாளர்களே. எழுத்தாளனால் நாட்டை நல்லவழியிலும் இட்டுச் செல்லமுடியும் உலகில் அமைதியையும் ஏற்படுத்தமுடியும். அதனைக் குலைக்கவும் முடியும். அதனை இன்று நாம் காண்கின்றோம்.

ஈரானின் மதத் தலைவர் அண்மையில் பிரித்தானியப் பிரசைக்கு மரணதண்டனை விதித்தார். இது அப்பிரசையை மட்டுமன்றி பிரித்தானியாவை மட்டும் அன்றி உலகையே திகைக்க வைத்துள்ளது. இந்தியாவில் பிறந்து பிரித்தானியாவில் வாழும் முஸ்லீமான சல்மான் ருஷ்தி' என்பவரிற்கு அயத்துல்லா கொமெய்னியால் மரணதண்டனை விதிக்கப்பட்டது. இத்தண்டனைக்கு அவன் செய்ததாகக் கூறப்படும் குற்றம் 'சாத்தானின் வசனம்' என்ற நாவலை எழுதியதையே இந்நாவல் இஸ்லாத்தையும் முகமது நபிகள் நாயகத்தையும் இழிவுபடுத்தும்வகையில் அமைந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்நாவலுக்கு எல்லா முஸ்லீம் நாடுகளும் தடை விதித்ததோடு, முஸ்லீம்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. 'ருஷ்தியும்' தாம் செய்தது தவறு என உணர்ந்துள்ளார். இந்நிலையில் அவர்மீது விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறைவேற்றுவதில் ஈரான் உறுதியாக உள்ளது. இதனால் பிரித்தானியாவுக்கும், ஈரானுக்கும் இடையில் உள்ள உறவு மிகமோசமாகப் பாதித்துள்ளதோடு ஏனைய நாடுகளும் இப்பிரச்சனையால் பாதிக்கப்படும் சூழ்நிலைக்குள்ளாகியுள்ளன.

எழுத்தாளனுக்கு எழுத்துச் சுதந்திரம் உண்டு. அவன் கருத்தை வெளியிட உரிமை உண்டு. ஆயினும் பிறரைப் புண்படுத்தும் வகையில் எழுதுவது விரும்பத்தகாதது. அவ்வாறு எழுதப்பட்டாலும் அதற்கு மரணதண்டனை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. ருஷ்தியின் நூல் தடை செய்யப்பட்டு அவரும் மன்னிப்புக்கோரமுற்பட்டும் அவரை மன்னித்திருத்தல் உண்

மையில் அநாகரிகமானது. இது நாடுகளுக்கிடையில் உள்ள உறவு களைப் பாதிக்கும். மதஅலையினால் எழுத்தாளனின் எழுத்துரிமை பறிக்கப்படுவது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்க முற் படுவதாகும்.

எது எப்படியாயினும் சல்மான் ருஷ்தியின் எழுத்து இன் னும் பலரையும் குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளது உலகையே கலக்கியுள்ளது. இதில் இருந்து அணுகுண்டு, ஏவுகணை போன்ற வற்றுக்கில்லாத பேராற்றல் எழுத்தாளனின் எழுத்துக்கு உண்டு என்பதில் சிறிதும் ஐயமில்லை.


உங்களுக்குத் தேவையான
சொகுசான பாதணிகள்
பெற்றுக் கொள்வதற்கு

நியூ தீபாவை நாடுங்கள்!

மற்றும் அன்பளிப்புப் பொருட்கள்
பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான
சப்பாத்து வகைகளும்,
நவநாகரீக நங்கையருக்கு ஏற்ற காலணிகளும்
பெற்றுக் கொள்வதற்கு தீபாவை நாடுங்கள்.

# நியூ தீபா

கிளை: நியூ பிரசாந்
பஸ்தரிப்பு நிலையம்
அச்சுவேலி





மாணவ மணிகளின் உதய சூரியன்

A/L கலை வர்த்தக விஞ்ஞான
வகுப்புகளுக்குச் சிறந்த
நிறுவனம்

# குகன் இன்ஸ்ரியூட்

அச்சுவேலி
கிளை: இடைக்காடு

கலை வர்த்தகப் பிரிவு ஆசிரியர்

| | |
|---|---|
| பொருளியல் | திரு. லோகசிங்கம் |
| வர்த்தகமும் நிதியும் | திரு. கேசவன் |
| கணக்கியல் | திரு கணேசலிங்கம் |
| அளவையியல் | திரு. விக்கி |
| தமிழ் | திரு. ஞானம் |
| இந்து நாகரிகம் | திரு. காரை |
| புவியியல் | திரு. ஜேசுதாசன் |

விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்

| | |
|---|---|
| இரசாயனவியல் | திரு. தில்லை |
| பௌதிகவியல் | திரு. விக்கி |
| தாவரவியல் | திரு. பாலா |
| விலங்கியல் | திரு ஞானேந்திரன் |
| தூய பிரயோக கணிதம் | திரு. நல்லையா |

புதிய வகுப்புக்கள் ஆண்டு 9, 0. 11 ஆரம்ப
மாகிவிட்டன

## சூரியா பார்மசி

### பஸ்நிலைய முன்பாக அச்சுவேலி

எங்களிடம் சகல விதமான ஆங்கில மருந்துகளை மொத்தமாகவும் சில்லறையாக வும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

### மற்றும் குழந்தைகளுக்கான

பால்மா வகைகள், ஓடிக்கொலோன், ஒலிவ்ஓயில் மற்றும் தேன், நெய் ஆயுர்வேத மருந்து வகை கள் விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

கால்நடை வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள், வெள்ளை சேவற்குஞ்சுகள், கறுப்புவரிக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், பிறவுன் பேட்டுக் குஞ்சுகள்) என் பவற்றை நம்மிடம் ஓடர் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் ஆதரவிற்கு நன்றி

# சூரியா பார்மஸி

**பஸ்நிலையம்** **அச்சுவேலி**



இச்சஞ்சிகை ஆசிரியர் திரு. மு. திருஞானசேகரம் அவர்களால் சுடரொளி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.